இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் கற்கை நெறி
இறுதிப் பரீட்சை – 2008/09
MCC 1103 – அடிப்படை புள்ளிவிபரவியலும் பொருளியலும்
காலம்: இரண்டு (2) மணித்தியாலங்கள்

திகதி: 14.12.2008 நேரம்: 10.00 மு.ப – 12.00 ந.ப வரை

<u>பொதுவான அறிவுறுத்தல்கள்</u>

1. பகுதி 'அ' விலிருந்து இரண்டு (02) வினாக்களையும் பகுதி 'ஆ' விலிருந்து இரண்டு (02) வினாக்களையும் தெரிவு செய்து (04) வினாக்களுக்கு விடையளிக்குக.
2. ஒவ்வொரு பகுதிக்கும் ஒரு மணித்தியாலத்தைச் செலவிடல் சிறந்தது.
3. ஒவ்வொரு பகுதிக்குமான விடையினைத் தனிதனி விடை புத்தகங்களில் எழுதி வேறாகக் கையளிக்கவும்.
4. வரைவுத்தாள் வழங்கப்படும்.
5. நிகழச்சிப்படுத்தப்படாத எண் கூட்டு பொறிகள் பாவிப்பதற்கு அனுமதிக்கபட்டுள்ளது.
6. எல்லா வினாக்களும் சமமான புள்ளிகளைக் கொண்டுள்ளன.

## பகுதி 'அ'

01. (i) ஒரு நாடு முகம் கொடுக்கும் அடிப்படைப் பெருளாதார பிரச்சினைகள் (fundamental economic problems) யாவை?

(ii) கலப்பு பொருளாதார முறையொன்றினைக் (mixed economic system) கொண்டுள்ள நாடொன்று எவ்வாறு இப் பிரச்சினைகளைத் தீர்க்கும் என்பதனை விளக்குக.

(iii) பொருளாதார வளர்ச்சி (economic growth) என்பது யாது? உற்பத்தி சாத்தியங்கள் வளை கோட்டின் (Production Possibility Curve) உதவியுடன் இதனை விளக்குக.

02. (i) நிரம்பல் விதி (Law of Supply) என்பது யாது?

(ii) "நிரம்பல் மாற்றமும் நிரம்பல் தொகையில் மாற்றமும் ஒரே கருத்தினைக் கொள்ளவில்லை". இதனை ஏற்றுக்கொள்கின்றீரா? உருவங்களுடன் விளக்குக.

(iii) கீழ்வரும் ஒவ்வொரு நிலைமைகளிலும் தோன்றக் கூடிய சந்தை விளைவுகளை, கேள்வி நிரம்பல் ஆய்வினைக் கொண்டு (Demand and Supply Analysis) விளக்குக.

அ. அதிக தொழிலாளர்களைக் கொண்டு 'x' எனும் பொருள் உற்பத்தி செய்யப்படுவதுடன், சம்பள வீதமும் அதிகரிக்கின்றது. 'x' எனும் பொருளுக்கான சந்தை யாது?

ஆ. கணனி இயந்திரங்களின் விலை குறைகின்றது. மென்தொகுதிப் பொருட்களுக்கான சந்தை யாது?

இ. விவசாயிகளுக்கு அரசாங்கம் மானியமொன்றினை வழங்குகின்றது. அரிசிக்கான சந்தை யாது?

உ. பானுக்கான விலை இறங்குகின்றது. அரிசிக்கான சந்தை யாது?

ஊ. மக்களின் வருமானம் அதிகரிக்கும் போது, கறுப்பு, வெள்ளை தொலைக்காட்சி பெட்டிக்களுக்கான சந்தை யாது?

03. கீழ்க்குறிப்பிடும் நிறுவனங்கள் எத்தகைய சந்தைகளில் செயலாற்றுகின்றன? இந் நிறுவனங்கள் விலை தீர்மானிப்பவர்களா (Price Takers) அல்லது விலை மேற்கொள்பவர்களா (Price Makers)? உமது விடைகளுக்கான காரணங்களைத் தருக.

அ. காப்புறுதிச் சேவையினை வழங்கும் நிறுவனமொன்று

இ. சப்பாத்துக்களை (shoes) உற்பத்தி செய்யும் நிறுவனம்

04. கீழ் வருவனவற்றிக்கு சிறு குறிப்பெழுதுக.

(i). பண்டமாற்று முறையும் (Barter System), அதன் பிரதிகூலங்களும்

(ii). வருமானமும், பிரதியீட்டு விளைவும் (Income and Substitution Effect)

(iii). நிறைபோட்டிச் சந்தை (Perfectively Competitive Market)

(iv). அருமையும், சந்தர்ப்பச் செலவுகளும் (Scarcity and opportunity cost)

## பகுதி ‘ஆ’

05. (i) $243 \times (27)^{-4/3}$ ன் சதாரன பெறுமதியினைக் காண்க.

(ii) அ. 5.7 னைக் $(5 + 0.7)$ எனக் கருதி $(5.7)^2$ த் தீர்க்குக.

ஆ. $\frac{\sqrt{12}}{\sqrt{8}}$ தீர்க்குக.

(iii) பின் வரும் சமன்பாடுகளைத் தீர்க்குக.

அ. $7x - 5[x - \{7 - 6(x - 3)\}] = 2x + 5$

ஆ. $3x + 5y = 19$

$x + 3y = 9$

இ. $15x^2 - 10x = 40$

ஈ. ஒரு மனிதன் ‘A’ லிருந்து ‘B’ க்கு மணித்தியாலமோன்றுக்கு 4 கி.மீ. வீதத்தில் பிரயாணம் செய்கின்றான். அம் மனிதன் ஒரு மணித்தியாலத்திற்கு 3 2/3 கி.மீ. வீதத்தில் பிரயாணம் செய்திருப்பானாயின், ‘A’ யிலிருந்து ‘B’ யை அடைய 3 மணித்தியாலங்களை அதிகமாக எடுத்திருப்பான். ‘A’ கும், ‘B’ க்கும் இடையேயுள்ள தூரத்தினைக் காண்க.

06 (i) கீழ் வருவனவற்றினை சுருக்கமாக விளக்குக.

(அ) படைமுறை மாதிரி எடுப்பு (stratified sampling)
(ஆ) கொத்து மாதிரி எடுப்பு (cluster sampling)
(இ) பன்னிலை மாதிரி எடுப்பு (multistage sampling)

(ii) கீழ் வருவனவற்றில் எது பொருத்தமற்றது?

இடை (mean), இடையம் (median), ஆகாரம் (mode), வீச்செல்லை (range). சுருக்கமாக விளக்குக.

(iii) ஒரு பரீட்சைக்குரிய கேள்விக்கு இரு மாணவ குழுக்கள் பெற்ற புள்ளிகைளை கீழ் காணும் அட்டவனைகள் காட்டுகின்றன.

அ.

| புள்ளி | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|
| மீடிறன் | 10 | 5 | 8 | x | 3 |

இப் புள்ளிகளின் இடையம் 1.5 ஆகவிருப்பின் “x” ன் பெறுமதியினைக் காண்க.

ஆ.

| புள்ளி | 0 | 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|---|---|
| மீடிறன் | 10 | 5 | 8 | y | 3 |

இப் புள்ளிகளின் இடை 1.5 ஆக இருப்பின் “y” ன் பெறுமதியினைக் காண்க.

07. (i) கீழ் வரும் தரவுகளை வெளிப்படுத்தும் முறைகளை (Data presentation methods) விளக்குக.

அ. சித்திரவரையம் (Pictrogrammes)
ஆ. பரிதிவரைபடம் (Piecharts)
இ. சலாகை கோட்டுப்படம் (Bar charts)

(ii) ஒரு நவீன சந்தையிலிருந்து 30 வாடிக்கையாளர்களினால் வாங்கப்பட்ட பொருட்களின் தொகையினை கீழே அட்டவனைப் படுத்தப்பட்டுள்ளது

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 8 | 6 | 9 | 9 | 4 | 18 | 10 | 10 | 12 |
| 12 | 7 | 7 | 8 | 12 | 10 | 10 | 11 | 9 | 13 |
| 5 | 6 | 11 | 14 | 5 | 6 | 6 | 5 | 13 | 5 |

அ. பொருட்களின் தொகையினை மீடிறன் பரம்பலொன்றினுள் அமைக்குக.

ஆ. இடையையும் இடையத்தினையும் காண்க.

இ. தரவுகளின் நியம விலகளை (SD) காண்க.

ஈ. முடிவுகளை விளக்குக.

*(பதிப்புரிமையுடையது)*